DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Calender | Case No. CC . 37/2015 |
| Miscellaneous | |
| Preliminary Register | |
| Sessions | |
| Deposition of Witness for | Prosecution Pw 2 |
| Name | கண்ணன் |
| Father / Husband Name | கொங்கன் |
| Village | |
| Taluk | சிவகங்கை |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 24th April 2023.

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**முதல் விசாரணை:-**

1) நான் பகைவரைவென்றான் கிராமத்தில் குடியிருந்து வருகின்றேன். நான் விவசாய வேலை செய்து வருகின்றேன். அ.சா.1 என் அக்கா மகள். விபத்தில் இறந்த நபர் அ.சா.1 ன் கணவர். தேதி ஞாபகமில்லை டிசம்பர் மாதம் 2014 ம் வருடம் மதியம் 01.30 மணியளவில் அ.சா.1 எனக்கு போன் செய்து அ.சா.1 ம், அவரது கணவரும் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது ஒய்யவந்தான் விளக்கு ரோட்டின் அருகே வரும் போது விபத்து ஏற்பட்டதாக உடனே என்னை வரும்படி சொன்னார்.

2) நான் உடனே சம்பவ இடம் சென்றேன். அப்போது அ.சா.1 ன்

கணவரான கார்மேல்ராஜ் என்பவர் அடிபட்டு கிடந்தார். அடிபட்டு கிடந்தவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். நான் பார்த்த போது அ.சா.1 ன் கணவருக்கு கை, எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது, மயக்கநிலையில் இருந்தார்.

3) அவசரமாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதால் எந்தெந்த இடத்தில் காயம் என்பதை நான் கவனிக்கவில்லை. தூக்கும் போது கை மட்டும் தொங்கியதால் முறிவு ஏற்பட்டதை தெரிந்து கொண்டேன். என்னுடன் உறவினர் தங்கையா என்பவரும் வந்தார். விபத்து எப்படி நடந்தது என அ.சா.1 டம் கேட்டபோது சிவகங்கைக்கு வந்துவிட்டு காளையார்கோவிலுக்கு திரும்பும் போது தொப்பி காற்றில் பறந்து விழுந்துவிட்டதாகவும், அதனை திரும்ப வந்து எடுக்க வரும் போது வளைவில் இருந்து திரும்பி வந்த கார் வேகமாக வந்து அ.சா.1ன் கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக சொன்னார்.

4) சிவகங்கை அரசு மருத்துவமனையில் இருந்து அ.சா.1 ன் கணவரை மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு 3 நாட்கள் சிகிச்சைக்கு பிறகு அ.சா.1 ன் கணவர் சிகிச்சை பலனின்றி 01.01.2015 ம் தேதி காலை இறந்துவிட்டார். பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதம் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக சொந்த ஊருக்கு எடுத்து வந்து நல்லடக்கம் செய்தோம். அ.சா.1 ன் கணவரின் இறப்பிற்கு காரை ஓட்டி வந்தவர் தான் காரணமாக இருக்கலாம். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**:-

1) இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் கார்மேல்ராஜ் இறந்த அன்று விசாரித்தார்கள். விபத்து சம்பந்தமாக யார் எனக்கு தகவல் சொன்னது என்றால் அ.சா.1 . தகவல் சொன்னார். நான் மருத்துவமனைக்கு தான் நேரடியாக சென்றேன் என்றால் சரியல்ல விபத்து நடந்த இடத்திற்கே சென்றேன் அதன் பின்பு தான் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சென்றோம்.

2) நான் சம்பவ இடம் சென்ற போது ரோட்டிற்கு எந்த திசையில் காயம்பட்டவரை வைத்திருந்தார்கள் என்றால் வடக்கு திசையில். அ.சா.1 சென்ற இருசக்கர வாகனம் எந்த திசையில் இருந்தது என்றால் தெற்கு திசையில். வாகனத்தை யார் வீட்டிற்கு எடுத்துச்சென்றார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது

என்றால் சரிதான்.

3) போலிசார் அ.சா.1 ஐ எந்த மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் மதுரையில் வைத்து விசாரித்தார்கள். பிரேத விசாரணை அறிக்கையில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அப்போது தான் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் யார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த வளைவு இருந்ததால் தான் வாகனம் வந்தது தெரியவில்லை என்றால் சரியல்ல அவர் சென்ற போது கார் வரவில்லை வளைவில் இருந்து கார் வந்துள்ளதாக அ.சா.1 சொன்னார்.

4) நான் விபத்து நடந்த இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், அ.சா.1 எனக்கு அக்கா மகள் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 24.04.2023
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**